Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 65/2020**

**Deposition of PW.1 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | ஜாதி | : | |
| த/பெ | : | ரத்தினம் | தொழில் | : | சிறப்பு சார்பு ஆய்வாளர், (ஓய்வு) |
| கிராமம் | : | அன்னஞ்சி, தேனி மாவட்டம் | சமயம் | : | |
| தாலுகா | : | பெரியகுளம் தாலுகா | வயது | : | 65/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.10.2025.

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது தேனி மாவட்டம், அன்னஞ்சியில் வசித்து வருகிறேன். நான் பணி ஓய்வு பெறுவதற்கு முன்பாக கடந்த 8.3.2012ம் தேதி சிறப்பு சார்பு ஆய்வாளராக நான் சின்னாளபட்டி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது, அன்று காலை 7 மணி போல நானும் சார்பு ஆய்வாளர், முருகன், சிறப்பு சார்பு ஆய்வாளர் பாலசுப்ரமணி, காவலர் கண்ணன் ஆகியோர்கள் சின்னாளபட்டியிலிருந்து மேலகோட்டை செல்லும் வழியில் புத்துக்கோயிலில் வாகன தனிக்கை செய்துக் கொண்டிருந்தபோது தெற்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த வாகனத்தை தணிக்கை செய்தபோது, அந்த வழியாக வந்த ஒரு நபர் துப்பாக்கி வைத்திருந்ததாக சொல்லி அவரை கைது செய்து காவல் நிலையம், அவரை காவல் நிலையம் அழைத்து வந்தோம். காவல் உதவி ஆய்வாளர் விசாரித்து அந்த நபர் மீது வழக்கு பதிவு செய்தார் .காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் பணியில் இருந்தபோது ஒவ்வொரு நாளும் காலை 7 மணிக்கு ஆஜர் அணி வகுப்பு நிலையத்தில் நடத்தப்படும் என்றால் சரிதான். அந்த ஆஜர் அணிவகுப்பில் அந்த நாளுக்கு என்ன பணி என்று ஒவ்வொருவருக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் என்றால் சரிதான். அவ்வாறு பணி ஒதுக்கீடு செய்வது காவல் நிலைய பொதுநாட்குறிப்பில் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். அந்த பொது நாட்குறிப்பை பார்த்தால் நீங்கள் சொல்லும் நாளில்

யார்யார்க்கு என்ன பணி ஒதுக்கப்பட்டிருந்தது என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். எதிரி துப்பாக்கி வைத்திருந்தார் என்று உங்களால் உறுதியாக சொல்ல முடியாது என்றால் சரிதான்.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 88/2022**

**Deposition of PW.5 (**கூடுதல் சாட்சி**-1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | ஜாதி | : | |
| த/பெ | : | மாமுட்டி | தொழில் | : | சிறப்பு சார்பு ஆய்வாளர், கன்னிவாடி காவல் நிலையம் |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 36 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.10.2025.

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் தற்போது கன்னிவாடி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் திரு. முருகேசன் அவர்கள் பணியிட மாறுதலாகி வேறு காவல் நிலையத்திற்கு சென்றவிட்ட நிலையில், ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 09.06.2019 அன்று கன்னிவாடி காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ரவி என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது, திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று, அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற பெரியகருப்பன் மகன் சடையாண்டி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று, குற்ற எண்.150/2019, இதச சட்டபிரிவுகள் 279, 337 ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த புகார் வாக்குமூலம் **(**அ**.**சா**.**ஆ**.2/PW.5)** ஆகவும், முதல் தகவல் அறிக்கை **(**அ**.**சா**.**ஆ**.3/PW.5)** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அழகர் மற்றும் தர்மர் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் **(**அ**.**சா**.**ஆ**.4/PW.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரைபடம் **(**அ**.**சா**.**ஆ**.5/PW.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 10 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு எதிரி செந்தில்குமார் என்பவரை கைது செய்து நிலையபிணையில் விடுவித்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த மணிவேல் சிகிச்சை பலனின்றி இறந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான இதச சட்டப்பிரிவுகள் 279, 337 IPC யிலிருந்து இதச சட்டப்பிரிவுகள் 279,

304(A) IPC யாக மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **(**அ.சா.ஆ**.6/PW.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு இவ்வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் திரு. முருகேசன் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார்.

விபத்தில் காயமுற்ற சடையாண்டி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. கார்த்திகேயன் என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் ஆகியவற்றை பெற்றுள்ளார். அந்த விபத்து பதிவேடு **(**அ.சா.ஆ**.7/PW.5)** ஆகவும், காயச்சான்றிதழ் **(**அ.சா.ஆ**.8/PW.5)** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

விபத்தில் இறந்துபோன மணிவேல் என்பவரின் பிரேதத்தின் மீது கடந்த 13.06.2019 ஆம் தேதி மதியம் 09.30 மணிமுதல் 11.00 மணிவரை திண்டுக்கல் அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பு வைத்து சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்களின் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். பிரேத விசாரணை அறிக்கை **(**அ.சா.ஆ**.9/PW.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறந்துபோன பொன்னுச்சாமி என்பவரின் இறப்பிற்கான மருத்துவ காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக அனுப்பிவைத்துள்ளார்.

விபத்தில் சம்மந்தமுடைய TN 57 BU 0321 என்கிற பதிவெண் கொண்ட TVS XL மற்றும் TN 57 M 7528 என்ற ஆட்டோ ஆகிய வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளுக்காக அனுப்பி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.விஜயகுமார் என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றுள்ளார். அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் முறையே **(**அ.சா.ஆ**.10/PW.5** மற்றும் அ.சா.ஆ**.11/ PW.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

விபத்தில் இறந்துபோன மணிவேல் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திருமதி. மாலா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **(**அ.சா.ஆ**.12/PW.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து, எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 279, 304(A) IPC ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வழக்கு ஆவணங்களான மாதிரிவரைபடம், பார்வைமகஜர், வழக்கின் தோதிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ட அரசுத்தரப்பு சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த

வழக்கிற்குத் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. புகாரை சரிவர புலன் விசாரணை செய்யாமல் இழப்பீடு பெறவேண்டும் என்ற நோக்கத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor